Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 07, 2023

புதன்கிழமை ஜூன் 07, 2023 | ஒளி: 09 கதிர்: 013 | பக்கம்: 06 | வடக்கு,கிழக்கு | free

# 'வற்' திருத்தம்

பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்கமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் ஜனாதிபதியும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியளிப்பு வேலைத்திட்டத்திற்கமைய, பெறுமதி சேர் வரி பற்றிய முக்கிய இரண்டு மறுசீரமைப்புகள் அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

தொடர்ச்சி P2



## முத்திரை வெளியிட்டது வெட்கக் கேடானது

முகவரி இல்லாத சமூகத்துக்கு பல வருடங்கள் தலைவராக இருந்தவரை கௌரவிப்பதற்காக முத்திரை வெளியிடுமளவுக்கு இந்தப் பாராளுமன்றம் இருக்கின்றது என்றும், இது வெட்கக் கேடானது என்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்ற விமான கட்டளை சட்டங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இளைஞர்கள் மாற்றங்களை கோரி போராட்டங்களை முன்னெடுத்தனர். ஆனால், நாடு தொடர்பில் முன்னேற்றகரமான வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா என்ற கேள்விகள் எழுகின்றன. சுற்றுச்சூழல் தொடர்பில் பல்கலைக்கழகத்தை அமைப்பதாக ஜனாதிபதி கூறுகின்றார்.

தொடர்ச்சி P2

கஜேந்திரகுமாருக்கு

# பயணத்தடை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (06) தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.



மருதங்கேணி பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் சமர்பித்த விண்ணப்பத்துக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மருதங்கேணி பிரதேசத்தில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற கூட்டமொன்றின் போது பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களுடன் ஏற்பட்ட சம்பவம் குறித்தே நீதிமன்றில் குறித்த விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

அதனையடுத்து, நீதிமன்றத்தால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு கஜேந்திரகுமார் எம்.பிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




தங்கத்துடன் சிக்கிய

## எம்.பியின் மீது ஏன் சட்டம் பாயவில்லை?

விமான நிலையத்தில் சட்டவிரோத தங்கம் மற்றும் பொருட்களுடன் அண்மையில் பிடிபட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு ஏன் சட்டம் உரிய முறையில் அமலாக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) கேள்வி எழுப்பினார்.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தை விதிகளை பின்பற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் பல சரத்துகள் உள்ளதாகவும் குறிப்பிட்டார்

தொடர்ச்சி P2




வெள்ளத்தில் சிக்குண்ட

## சா/த பரீட்சார்த்திகளை கரைசேர்த்த கடற்படை

புளத்சிங்கள பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் பாடசாலை பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபங்களுக்கு செல்ல இலங்கை கடற்படை உதவியுள்ளது.

சில பிரதேசங்களில் பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கை அடுத்து, கடற்படையினர் உள்ளூர் மக்களுக்கு தமது உதவிகளை வழங்கியுள்ளனர்.

புளத்சிங்கள, பதுரலிய, லத்பந்துர, கலவான பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்குவதற்காக நான்கு நிவாரண குழுக்களை கடற்படை அனுப்பியுள்ளது.

தற்போது க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதாக கடற்படை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



25 வருடங்கள் ஆட்சியில் அமர்த்தி

## ஜனநாயகத்தை சீர்குலைக்க மக்கள் தயாராக இல்லை

2048ஆம் ஆண்டில், ஜனாதிபதிக்கு 99 வயதாகும் போது நாட்டின் பொருளாதாரம் ஸ்திர நிலைக்கு வரும் வரையில் அவருக்கு இன்னும் 25 வருடங்களுக்கு ஆட்சியில் இருப்பதற்கு இடமளித்து, இந்த நாட்டின் ஜனநாயகத்தை சீர்குலைக்க மக்கள் தயாராக இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்ற விமான கட்டளை சட்டங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆளும் தரப்பினர் பக்கத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி தேர்தலுக்கும் தயார், பொதுத் தேர்தலுக்கும் தயார் என்று கூறுகின்றனர். ஆனால், இப்போது தேர்தல் வேண்டாம் என்றும் கூறுகின்றனர். இவை திரிபுபடுத்தப்பட்ட கதைகளே.

நுவரெலியாவில் ஜனாதிபதி கருத்தொன்றை கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## டயானா விவகாரம்: தீர்ப்பு ஒத்திவைப்பு

சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, எம்.பியாக இருக்க தகுதியற்றவர் என்று அறிவிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு குறித்த தீர்ப்பை ஜூலை 25ஆம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (06) ஒத்திவைத்தது.

இந்தத் தீர்ப்பு செவ்வாய்க்கிழமை (06) வழங்கப்பட இருந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் நீதியரசருமான நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் எம்.ஏ.ஆர். மரிக்கார் தீர்ப்பு ஜூலை 25ஆம் திகதி வழங்கப்படும் என்று அறிவித்தனர். பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க டயானா கமகே தகுதியற்றவர் என்று தகுதிமுறை வினவும்



நீதிப் பேராணை (ரிட்) உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, சமூக ஆர்வலர் ஓஷால ஹேரத் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

டயனா கமகே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், சட்டமா அதிபர் உள்ளிட்ட 15 பேர் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

சர்வதேசத்திடம் நீதிகோரிச் செல்வோரை

## துப்பாக்கி கொண்டு அச்சுறுத்துகிறீர்கள்

### சிறிதரன் எம்.பி தெரிவிப்பு அமைச்சர் அலிசப்ரிக்கும் பதிலடி



2009க்கு பின்னர் தமிழர் தரப்பில் இருந்து எங்காவது துப்பாக்கி வெடித்துள்ளதா, கைக்குண்டு வெடித்துள்ளதா? அதுபற்றி அவர்கள் சிந்தித்துள்ளார்களா? நியாயமான முறையில் நீதிகோரி சர்வதேச சமூகத்தை நோக்கி செல்பவர்களை துப்பாக்கியால் அச்சுறுத்துகின்றீர்கள் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

'டயஸ்போரா'வுடன் சேர்ந்து மீண்டும் ஆயுத கலாசாரத்தை நீங்கள் தூண்டக் கூடாது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியுள்ளார் என்றும் நாங்கள் மீண்டும் நாட்டில் துப்பாக்கி கலாசாரம் ஏற்படுவதை விரும்புவர்கள் அல்ல என்று தெரிவித்தார். "வெளிவிவகார அமைச்சர் அச்சுறுத்தல் பாணியில் மீண்டும் துப்பாக்கியை எடுப்போம் என்பதை போன்ற வார்த்தையை பிரயோகித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பல்கலைக்கழகங்களை கட்டியெழுப்ப முடியாது

பல்கலைக்கழக கட்டமைப்பினுள் நிலவும் பல்வேறு பிரச்சினைகளை பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் முழு பல்கலைக்கழக கட்டமைப்பையும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாத நிலையை எட்டும் என்று தெரிவித்தார்.

பராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) உரையாற்றிய போது, மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையின் தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பு



முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பல பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் தற்போது நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

தொடர்ச்சி P2

சட்டவிரோத பொருட்கள் இறக்குமதி

## 30 கோடி பெறுமதியான கொள்கலன் சிக்கியது

டுபாயில் இருந்து சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட 30 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களுடனான கொள்கலன் ஒன்றை இலங்கை சுங்கப் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

வாகன உதிரிப்பாகங்கள் என்ற போர்வையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், அழகுசாதனப் பொருட்கள், மதுபானம், சிகரெட்டுகள் மற்றும் 3 வாகன பாகங்கள் உள்ளிட்டவை இருந்ததாக தெரியவந்துள்ளது.

## கம்பளையில் நிலநடுக்கம்

கம்பளை பிரதேசத்தில் நில நடுக்கமொன்று பதிவாகியுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது. இதனால் எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் திங்கட்கிழமை இரவு 10.49 மணியளவில் 2 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.



## தங்கம், டொலர் விலை சரிந்தது

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு காரணமாக தங்கம் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றின் விலைகள் குறைவடைந்துள்ளதாக கொழும்பு, செட்டியார் தெரு வர்த்தகர்கள் மூலம் அறிய முடிகிறது.

22 கரட் தங்கத்தின் விலை 1 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாயாகவும் 24 கரட் தங்கத்தின் விலை 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயாகவும் செவ்வாய்க்கிழமை (06) பதிவாகியுள்ளது.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கி செவ்வாய்க்கிழமை (06) வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 284 ரூபாய் 84 சதமாகவும் விற்பனை விலை 297 ரூபாய் 94 சதமாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமந்திரன் எம்.பி சமர்ப்பித்த சட்டமூலம்

## அரசியலமைப்புக்கு முரணானது அல்ல

### உயர்நீதிமன்றம் வியாக்கியானம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட 'மாகாண சபை தேர்தல் (திருத்தம்)' எனும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் செய்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2




ஜூன் 8 போராட்டம் முன்னெடுப்போரை

## மக்களே விரட்டியடிப்பர்

ஜூன் 8 ஆம் திகதி கொழும்பை சுற்றிவளைக்கப் போவதாக கூறியுள்ள சிலருக்கு நாடும் மக்களும் இயல்பு நிலைக்கு திரும்பிக்கொண்டிருப்பது பிடிக்கவில்லை என்றும் அவர்களை, மக்களே விரட்டியடிப்பார்கள் என்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) இடம்பெற்ற சிவில் விமான சேவை சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.



மேலும் தெரிவிக்கையில், "மக்கள் கஷ்டத்தில் இருக்க வேண்டும். எரிபொருளுக்கான, எரிவாயுக்கான, பால்மாவுக்கான வரிசைகளில் மக்கள் நாள்கணக்காக காத்திருக்க வேண்டும். அப்படியானால்தான் தமது விருப்பத்துக்கேற்ப நாட்டை வைத்திருக்க முடியும் என சிலர் நினைக்கின்றனர்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## துப்பாக்கி...

தயவு செய்து அலிசப்ரி போன்றவர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும். அவர்களுக்கு நல்லிணக்கம், நீதியென்றால், பொறுப்புக் கூறல் என்றால் என்னவென்று தெரிய வேண்டும்” என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்ற விமான கட்டளை சட்டங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த 2 ஆம் திகதி பொதுமக்களுடன் கலந்துரையாட சென்ற போது பொதுமக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களினால் துப்பாக்கி முனையில் அவர் அச்சுறுத்தப்பட்டு, கொலை செய்வதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்த பொதுமக்களின் முயற்சியாலும், அவரின் முயற்சியாலும் அவர் அவ்விடத்தில் உயிர் தப்பியுள்ளதாக அறிகின்றோம்.

ஆனால், யார் குற்றவாளிகளோ அவர்களை கைது செய்யாமல் தொடர்ந்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமாராட்சி மகளிர் அணித் தலைவியை மருதங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு 7ஆம் திகதி வரையில் தடுப்பு காவலில் வைத்துள்ளனர். இதேவேளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் உதயசிவம் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் நாட்டைவிட்டு கஜேந்திரகுமார் வெளியேறிவிடக்கூடாது என்று மருதங்கேணி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கமைய கிளிநொச்சி நீதிமன்றம் அவருக்கு நாட்டை விட்டு வெளியேறி கட்டளையிட்டுள்ளதாக அறிய முடிகின்றது. டயஸ்போராவுடன் சேர்ந்து மீண்டும் ஆயுத கலாசாரத்தை நீங்கள் தூண்டக் கூடாது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியுள்ளார். 2009க்கு பின்னர் தமிழர் தரப்பில் இருந்து எங்காவது துப்பாக்கி வெடித்துள்ளதா? கைக்குண்டு வெடித்துள்ளதா? அதுபற்றி அவர்கள் சிந்தித்துள்ளார்களா? நியாயமான முறையில் நீதிகோரி சர்வதேச சமூகத்தை நோக்கி போகின்றனர். இவ்வாறு செல்வர்களை துப்பாக்கியால் அச்சுறுத்துகின்றீர்கள்.

கஜேந்திரகுமாரின் தந்தை சுட்டுக் கொல்லப்பட்டார், பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சுட்டுக்கொல்லப்பட்டார். ஆனால் இன்னும் அந்த கொலைகளுக்கு நீதி கிடைக்கவில்லை. ஜோசப் பரராஜசிங்கம் தேவாலயத்திற்குள் சுட்டுக்கொள்ளப்பட்டார். அவரை சுட்டவர்கள் அமைச்சர்களாக இருக்கின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர். இன்னும் நீதி கிடைக்கவில்லை.

நியாயம் நீதிபற்றி சமூகமொன்று பேசுகின்றது என்றால், அதனை துப்பாக்கி முனையால் அடக்குவது சர்வசாதாரணமாகியுள்ளது. வெளிவிவகார அமைச்சர் அச்சுறுத்தல் பாணியில் மீண்டும் துப்பாக்கியை எடுப்போம் என்பதை போன்ற வார்த்தையை பிரயோகித்துள்ளார். தயவு செய்து அலிசப்ரி போன்றவர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும். அவர்களுக்கு நல்லிணக்கம், நீதியென்றால், பொறுப்புக் கூறல் என்றால் என்னவென்று தெரிய வேண்டும்.

அவர் போன்றோரை புனர்வாழ்வளித்தாலே துப்பாக்கி போன்ற வார்த்தைகள் அவர்களிடமிருந்து வராது. அவரின் வார்த்தை மிகவும் மோசமானது. அதனை வன்மையாக கண்டிக்கின்றோம். நாங்கள் மீண்டும் துப்பாக்கி கலாசாரத்தை விரும்புவர்கள் அல்ல. விரும்பி ஆயுதங்களை தூக்கவும் இல்லை. மீண்டும் துப்பாக்கியை தூக்குங்கள் என்று கூறுவதை போன்றே அலிசப்ரியின் கருத்து உள்ளது. கஜேந்திரகுமார நீண்ட அரசியல் பாரம்பரியத்தை கொண்டவர். அவரை துப்பாக்கி முனையில் சுடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தால் இதுவொரு அரச பயங்கரவாதமே. நல்லிணக்கம், பொறுப்பு கூறல் தொடர்பில் கூறிக்கொண்டு துப்பாக்கி முனையில் மக்களை அடக்குவதும், ஊடகங்களை அடக்கி சட்டத்தை கொண்டுவருவதும் ஜனநாயகமா?” என்றார்.

## சா/த...

புளத்சிங்கள பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் உட்பட பிரதேசவாசிகளுக்கு உதவிகள் மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்காக மேலும் நிவாரணக் குழுக்கள் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பல்கலைக்கழகங்களை...

இதன் காரணமாக அரச பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றி தனியார் துறையினரால் நடத்தப்படும் பல்கலைக்கழகங்களும் கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன. எவ்வாறாயினும்,அரசாங்கத்தின் புதிய வரிவிதிப்பு முறையால் நிறுவனத்திற்கு ஏற்படும் அனைத்து இழப்புகளையும் மாணவ மாணவிகளிடமிருந்தே ஈடுசெய்ய தனியார் பல்கலைக்கழகங்கள் செயல்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சில பல்கலைக் கழகங்களில் நிகழும் நிர்வாக சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகள் முழுப் பல்கலைக்கழக கட்டமைப்புக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது” என்றார்.

மேலும் நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் கீழ்வரும் கேள்விகளை எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பினார்.

இந்நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்களுக்கு தற்போதுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் எண்ணிக்கை யாது?

அரச பல்கலைக்கழகங்களில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?எதிர்வரும் ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் செயற்படுமா?

சர்வதேச அளவுகோல்களின் பிரகாரம்,பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்திலும் படிக்கும் மாணவர்களின் விகிதத்துடன் ஒப்பிடும் போது இருக்க வேண்டிய பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் எண்ணிக்கை யாது?

பல்கலைக்கழக கல்விக்கு தகுதி பெற்ற தகுதி அடிப்படையிலான (10%) மற்றும் குறைந்த வருமானம் ரீதியாக (90%) மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் மஹாபொல புலமைப்பரிசில் திட்டமானது முதலாம் ஆண்டு (2020/2021 உள்வாங்கல்) மாணவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாமதமானது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் 15,000 க்கும் மேற்பட்ட குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு கடுமையான அநீதியாகிவிடாதா? எனவே, இந்த மாணவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் என்ன தீர்வுகள் யாது?

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் காரணமாக,அதன் நிர்வாக மற்றும் கல்வி நடவடிக்கைகள் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளன.இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வி அமைச்சருக்கு பரிந்துரைகளை வழங்கியுள்ளதா?

அது என்ன?அந்தப் பரிந்துரைகளை அமுல்படுத்த இதுவரை அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா? அது எவ்வாறான நடவடிக்கை? இல்லை என்றால், இந்தப் பல்கலைக் கழகங்களில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அவசர நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்தது ஒட்டுமொத்த உயர்கல்வித் துறையே வீழ்ச்சியடையும் வரை அரசாங்கம் காத்திருக்கிறதா? என்று வினவினார்.

## அரசியலமைப்புக்கு...

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (06) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடிய போது சட்டமூலம் குறித்த உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தை திருத்துவதற்கான குறித்த சட்டமூலம்,தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி.யும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனால் தனிநபர் சட்டமூலமாக கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 11 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் தனிப்பட்ட உறுப்பினர் முன்மொழிவாக முதலில் வெளியிடப்பட்டதுடன் மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் அரசாங்க வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது.

இவ்வாறான நிலையில் இதனை சிலர் நீதிமன்ற சவாலுக்குட்படுத்தினர் . இது தொடர்பில் ஆராய்ந்த உயர் நீதிமன்றம் தனது வியாக்கியானத்தை சபாநாயகருக்கு அனுப்பி வைத்தது.

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் “மாகாணசபை தேர்தல்கள் (திருத்தம்)” எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனு மீதான

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்திருப்பதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தில் “மாகாணசபை தேர்தல்கள்(திருத்தம்)” எனும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல .சட்டமூலத்தின் 3 ஆம் வாசகத்தினை திருத்துவதற்கும் மற்றும் 4ஆம் வாசகத்தின் நீக்குவதற்குமான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உட்பட்டு சட்டமூலமோ அல்லது அதன் எந்த ஏற்பாடுகளுமோ அரசியலமைப்பக்கு முரண்பாடானதல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.

சுமந்திரன் எம்.பி.யின் “மாகணசபை தேர்தல்கள்(திருத்தம்)” எனும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்பட்டால் அதனை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என்பதுடன் பழைய வாக்களிப்பு முறையிலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## முத்திரை...

மலையகம் சுற்றுச்சூழலில் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்நிலையில் ஹந்தனையில் காணிகள் துண்டு துண்டுகளாக விற்கப்படுகின்றன. மைதானங்கள், வீதிகள், கோயில்கள், மயானங்கள் விற்கப்படுகின்றன. அரசியல்வாதிகளின் நெருக்கமானவர்களுக்கு அவை விற்கப்படுகின்றன. இதன்படி இளைஞர்கள் வீதியில் இறங்கி கோரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா? என்ற கேள்விகள் எழுகின்றன.

தபால் அமைச்சர் உள்ளிட்டோர் இணைந்து முன்னாள் தலைவர் ஒருவருக்கு நினைவு முத்திரையொன்று வெளியிட்டனர். இது தொடர்பில் பிரச்சினையல்ல. அவர் பிரதிநிதித்துவம் வழங்கிய மக்கள் சிலோன் டீ என்ற விலாசத்தை இந்த தேசத்திற்கு வழங்கியவர்கள்.

ஆனால் அவர் பிரதிநிதித்துவம் வழங்கி மக்களுக்கு இன்னும் விலாசம் இல்லை. இவ்வாறான மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய தலைவருக்கு தபால் முத்திரை வெளியிடப்படுகின்றது. இவ்வாறானவர்கள் இந்த பாராளுமன்றத்தில் இருப்பது வெட்கக்கேடாக உள்ளது. அந்த மக்களின் அடிப்படை பிரச்சினைகளைக் கூட அடையாளம் காணாதே இதனை செய்கின்றனர்.

இதேவேளை இப்போது தேர்தல் தொடர்பில் கதைக்கின்றோம். ஆனால் தேர்தலுக்கு செல்வதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை. பொருளாதாரத்தை செய்துவிட்டே தேர்தலுக்கு போவோம் என்று கூறுகின்றனர். அப்போது இந்த நாடு இருக்குமோ தெரியாது” என்றார்.

## ஜனநாயகத்தை...

இது நரிக்கு திராட்சைப் பழம் புளிக்கும் கதையை போன்றே உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு தேர்தல் என்பது ஒவ்வாமையையாகவே உள்ளது. மொட்டுக் கட்சியினருக்கும் அவ்வாறுதான். அவர்களுக்கு மக்கள் வாக்குகள் இல்லை, வேட்பாளர்கள் இல்லை என்பதற்காக நாங்கள் என்ன செய்வது.

இவ்வளவு காலம் தேசிய பாதுகாப்பு பற்றியே கதைத்தனர். இப்போது பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் கதைக்கின்றனர். ஜனாதிபதி கூறுவதை போன்று 2048இலேயே பொருளாதார ஸ்தீரத்தன்மை ஏற்படப் போகின்றது. அப்படியென்றால் 99 வயதில்தான் இந்த ஜனாதிபதியினால் தேர்தலை நடத்த வேண்டி வரும்.

தேர்தலை ஒத்திவைத்து எவ்வாறான ஆட்சியை கொண்டுவரப் போகின்றீர்கள் என்று கேட்கின்றேன். தேர்தலை இவர்கள் ஒத்திவைத்து என்ன செய்கின்றார் என்பதனை கூறுகின்றேன். ஹந்தானையில் 33 ஏக்கர் நிலத்தை பேர்ச்சர்ஸ் ஒன்று 33 ரூபாய் என்ற அடிப்படையில் ஹோம் லேண்ட் என்ற நிறுவனத்துக்கு வழங்கியுள்ளனர்.

இந்த காணியின் உண்மையான மதிப்பு 1760 மில்லியன் ரூபாவாகும். இவ்வாறான வேலைகளையே செய்கின்றனர். கொழும்பு 7இல் இருக்கும் டீல்காரர்களே தேர்தல் வேண்டாம் என்று கூறுகின்றனர்.

## ‘வற்’ திருத்தம்

அதன்கீழ், அதிகளவு விடுவித்தலை நீக்கி பெறுமதி சேர் வரி (VAT) முறைமையை மறுசீரமைப்புச் செய்தல், இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (SVAT) முறைமை நீக்கப்பட வேண்டியுள்ளது.

தற்போதுள்ள பெறுமதி சேர் வரியை விடுவித்தல் மீண்டும் அடிப்படை விதிமுறைகளுக்கமைய அண்ணளவாக மொத்தத் தேசிய உற்பத்தியின் 1.2% வீதமான வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது.

அதற்கமைய, கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளுக்கான விடுவிப்புக்களைப் போலவே, குறைந்த வருமானங் கொண்ட குடும்பங்கள் மீதான அழுத்தங்களை இலகுபடுத்துகின்ற மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளைப் பாதுகாக்கின்ற விடுவிப்புக்களைத் தொடர்ந்தும் பேணிக்கொண்டு, பெறுமதி சேர் வரி விடுவிப்புகளிலிருந்து அதிகளவை நீக்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது.

பெறுமதி சேர் வரியை மீளச் செலுத்துவதற்காக மிகவும் முறைசார்ந்த பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தி தற்போது நடைமுறையிலுள்ள இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (SVAT) முறைமையை 2024.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ளது.

அந்த வகையில் வரியை அகற்றுவதற்கு ஏற்றாற் போல் பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்கமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## எம்.பியின் மீது ஏன்...

4.611 கிலோ தங்கத்தை (80 மில்லியன் பெறுமதி) கொண்டு வந்த நபருக்கு 70 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகவும், அதனை செலுத்த முடியாமல் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டினார்.

74 மில்லியன் பெறுமதியான தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டு வந்த போது பிடிபட்ட இந்த பாராளுமன்ற உறுப்பினருக்கு 7.5 மில்லியன் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

போராட்டத்தின் விளைவா இது என கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், சபையில் அனைவரையும் அவமானப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட செயலை வன்மையாகக் கண்டிப்பதாகவும், எம்.பி பதவியை இராஜினாமா செய்யுமாறு கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் குடிமகனுக்கு ஒரு கவனிப்பும், பாராளுமன்ற உறுப்பினருக்கு மற்றொரு கவனிப்பும் நடைமுறைப்படுத்துவது முறை மாற்றமா என கேள்வி எழுப்பிய அவர், இதற்கு என்ன காரணம் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பின்னால் இருக்கும் மறை கரம் யாது? என கேள்வி எழுப்புவதாகவும், இது தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## டயானா விவகாரம்:...

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, பிரித்தானிய பிரஜை எனவும், பிரித்தானிய பிரஜை ஒருவரே பிரித்தானிய கடவுச்சீட்டை வைத்திருக்க முடியும் எனவும் மனுதாரர் கோரியுள்ளதுடன், வேற்று நாட்டில் குடியுரிமை பெற்றதன் மூலம், டயானா கமகே இலங்கை பிரஜாவுரிமையை இரத்துச் செய்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இரட்டைக் குடியுரிமை அல்லது வேறு எந்த வகை குடியுரிமையையும் டயானா கமகே பெறவில்லை என்றும் அவர் எம்.பி.யாகத் தெரிவு செய்யப்படுவதற்கும் அல்லது இலங்கையின் அரசியலமைப்பின் 89 மற்றும் 90ஆவது சரத்தின் 91ஆவது பிரிவின்படியும் பாராளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிப்பதற்கும் தகுதியற்றவர் என்று மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மக்களே...

இவ்வாறான நிலையில் தான் ஜூன் 8 ஆம் திகதி கொழும்பை சுற்றிவளைக்கப்போவதாக சிலர் கூறியுள்ளனர். இவர்களுக்கு நாடும் மக்களும் இயல்பு நிலைக்கு திரும்பிக்கொண்டிருப்பது பிடிக்கவில்லை. இந்த நிலைமையை கெடுக்க வேண்டும் என நினைக்கின்றனர். அதனால்தான் வீதிக்கிறங்கி சுற்றி வளைக்கப் போ கின்றனராம்.

ஜூன் 8 ஆம் திகதி கொழும்பை சுற்றிவளைக்கப்போவதாக கூறியுள்ளவர்களை இராணுவமோ பொலிஸாரோ விரட்டத்தேவையில்லை. மக்களே விரட்டியடிப்பார்கள் .நோயாளி ஒருவருக்கு ஏற்றப்பட்டுள்ள ‘சேலைன் ‘ போத்தலை பிடுங்கி எறிய மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். அப்படி யாராவது செய்ய முயன்றால் மக்களுக்கு கோபம் வரும். அவர்களை விரட்டியடிப்பார்கள்.

அதேவேளை சில நோய்களை குணமாக்க சில சிகிச்சை முறைகள் உள்ளன. எனவே இவ்வாறான நோய்கள் உள்ளவர்களை குணமாக்க அந்த சிகிச்சை ஜனாதிபதி கையில் எடுக்க வேண்டும் .அதுதான் நோயைக் குணமாக்க ஒரே வழி” என்றார்.

## 240 கிலோ கிராம் கஞ்சா விவகாரம்: காதர் பாஷாவுக்கு வலை

இலங்கைக்குக் கடத்த திட்டமிட்டிருந்த 240 கிலோ கிராம் கஞ்சாவை ஆந்திர பொலஸார், திங்கள்கிழமை (05) கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் பேரில் 8 பேரை கைது செய்தனர். இவை 120 கஞ்சா பொட்டலங்களாக பொதியிடப்பட்டிருந்தன.

ஆந்திர மாநிலம் திருப்பதி மாவட்டத்தில் உள்ள சுல்லுருபேட்டா என்ற இடத்தில் வைத்தே கைது செய்துள்ளனர்.

“ கைது செய்யப்பட்ட அனைவரும் தமிழகத்தை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

“அனகாப்பள்ளியில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட கஞ்சா, சூலூர்பேட்டையில் வாகன சோதனையின் போது கைப்பற்றப்பட்டது” என்று திருப்பதி காவல் கண்காணிப்பாளர் (எஸ்பி) பரமேஷ்வர் ரெட்டி தெரிவித்தார்.

குற்றவாளிகளிடமிருந்து ஒரு லொரி, கார் மற்றும் 5 அலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன. லொரியில் காய்கறிகளுக்கு அடியில் கஞ்சா வைக்கப்பட்டு இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சட்டவிரோத வர்த்தகத்தின் மன்னன் இலங்கையில் உள்ள காதர் பாஷா என்றும், இந்தியாவின் முக்கிய நடிகர்கள் சிலர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மீது ஆந்திரா மற்றும் தமிழகத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை மேலும் தெரிவித்துள்ளது.

காதர் பாஷாவை இன்டர்போல் உதவியுடன் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரமேஷ்வர் ரெட்டி தெரிவித்தார்.

# சிறுநீரை போத்தலில் பிடித்து தாக்குதல்



தனது சிறுநீரை பிளாஸ்டிக் போத்தலில் நிரப்பி, மற்றொருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திவுலபிட்டிய இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸின் சாரதி மீதே, தனியார் பஸ்ஸின் சாரதியால் இவ்வாறு சிறுநீர் தாக்குதல் மினுவாங்கொடை பஸ் நிலையத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால், சாரதிக்கு அண்மையில் உள்ள ஆசனங்களில் அமர்ந்திருந்தவர்கள் மீதும் சிறுநீர் பட்டுத் தெறித்துள்ளது.

குருநாகல் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ், பயணிகளை ஏற்றுவதற்காக, மினுவாங்கொடை பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொழும்பில் இருந்து மினுவாங்கொடையை நோக்கி பயணித்த தனியார் பஸ் சாரதியே இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளார்.

வற்றாப்பளை பொங்கல் நிகழ்வில்

# முன்னணியின் உறுப்பினர் கைது

■ கெ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்த போது, அங்கு வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி பகுதி செயற்பாட்டாளரை பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள்.

ஆலய பொங்கல் நிகழ்வு நடைபெற்று வந்த நிலையில், மக்கள் கூட்டத்துக்கு முன்னால் வலுகட்டாயமாக வாகனத்தில் ஏற்றிசெல்லப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட நபர், மருதங்கேணி பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.






## ஒளியை மறைக்கும் கொடிகள்

ஹட்டன் நகரில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் சிலவற்றில், வீதி விளக்குகளின் ஒளியை மறைக்கும் வகையில் கொடிகள் வளர்ந்து படர்ந்துள்ளன. ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அண்மையில் இருக்கும் வீதி விளக்கொன்றில் இவ்வாறு கொடி வளர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.

சுதத் எச்.எம் ஹேவா



# தம்பலகாமத்தில் நிலக்கடலை அறுவடை

■ ஹஸ்பர்

தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பத்தினிபுரம், பாலம்போட்டாறு 'சௌபாக்கியா' உற்பத்திக் கிராமத்தின் நிலக்கடலை அறுவடை நிகழ்வு நேற்று (06) இடம்பெற்றது.

சிறு தோட்ட உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக குறித்த பகுதியில் நிலக் கடலை அறுவடைக்கான உதவிகள் வழங்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் இதன் மூலம் பாரிய விளைச்சலை பெற்றுள்ளனர்.

குறித்த நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜீப் உட்பட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சக விவசாய போதனாசிரியர் என பலர் கலந்து கொண்டனர்.

தலைக்கவசம் அணியாமல் செல்வோரை

# 'வாட்ஸ்ஆப்' மூலம் அவதானித்து சட்ட நடவடிக்கை

■ எம்.யூ.எம் சனூண்




மோட்டார் சைக்கிள்களில் தலைக்கவசம் அணியாமல் செல்வோரை புகைப்படம் எடுத்து 'வாட்ஸ்ஆப்' குழுமத்தில் பதிவேற்றுவதன் மூலம், வீதி போக்குவரத்துச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் சமூக செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் நாலக டீ சில்வா (வடமேற்கு) தெரிவித்தார்.

புத்தளம் நகரத்தில் கள மேற்பார்வையை மேற்கொண்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் இத்திட்டம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது; இதற்கமைய மோட்டார் சைக்கிள்களில் ஹெல்மட் அணியாமல் செல்வோர், மூன்று பேரை ஏற்றிச் செல்வோர், சட்டத்துக்கு முரணாக வாகனத்தை செலுத்துவோர் போன்றோரின் படத்தை, நாலக டி சில்வாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் 'வாட்ஸ்ஆப்' குழுமத்தில் பதிவேற்றப்படும்.

அப்படத்தில் காணப்படும் வாகனத்துக்கு (வாகன இலக்கம் உரியமையாளருக்கு) எதிராக, பொலிஸ் வாகன போக்குவரத்துப் பிரிவால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு, மக்களின் ஒத்துழைப்புடன் முறைகேடாக வாகனம் ஓட்டுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் வாகன, வீதி விபத்துகளை தவிர்த்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# இலஞ்சம் வாங்கிய இருவர் கைது

ஒரு இலட்ச ரூபாய் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் பேரில் அலவத்துகொட கமநல சேவை உத்தியோகத்தர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கூற்றுப்படி, நெற்பயிர் நிலத்தை மீட்பதற்கான சான்றிதழை வழங்குவதற்காக இரு அதிகாரிகளும் லஞ்சம் கோரியுள்ளதாக லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அலவத்துகொடவில் வசிக்கும் நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக குறித்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் மாத்தளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# அம்பாறை மாவட்ட முன்னாள் எம்.பி காலமானார்

■ க. விஜயரெத்தினம்



அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், கல்முனை தொகுதி முன்னாள் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், பாண்டிருப்பை வதிவிடமாக கொண்ட டொக்டர் தோமஸ் தங்கத்துரை வில்லியம் நேற்று (06) இறையடி சேர்ந்தார்.

தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினராக இருந்த இவர், அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் குறைகள், தேவைகளையும், கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்துதல் பற்றியும் 2009ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையும் பாராளுமன்ற உறுப்பினராக சேவையாற்றிய காலப்பகுதியில் காத்திரமான சேவையாற்றியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல், பல வருடங்கள் வைத்தியராக இருந்து பிரதேச பொதுமக்களுக்கு சேவையாற்றி தமிழ், முஸ்லிம் மக்களின் மனதில் நீங்காத இடத்தை பிடித்துள்ளார்.

அன்னாரின் இறப்பானது, பிரதேச பொதுமக்களுக்கும், புத்திஜீவிகளுக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் இறுதி நல்லடக்கம், இன்று (07) பி.ப 4.00 மணிக்கு பாண்டிருப்பில் நடைபெறும்.

# மேட்டு நிலங்களுக்கும் உரவினியோகம் தேவை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

மேட்டு நிலங்களுக்கும் உரவினியோகம் வழங்கப்படவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள் பிரதி ஆணையாளர் பா. தேவரதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற விவசாயத்துறை அமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறுதானியம் மற்றும் மரக்கறி செய்கையாளர்களுக்கு உரம் வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது. எனவே மேட்டு நில பயிர்செய்கையாளர்கள் தமது தொழில்களை விட்டுவிட்டு, நெல்சார் விவசாயங்களை மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டனர். இந்த நிலை தொடருமானால், மாவட்டத்தில் சிறுதானியம், மரக்கறி செய்கையாளர் இல்லாமல் போகும் நிலை காணப்படும் என்று தெரிவித்தார்.



# கிழக்கு ஆளுநரின் மக்கள் சந்திப்பு

■ அ. அச்சுதன்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிள் வழிகாட்டுதலின் கீழ் இன்று (புதன்கிழமை) பிற்பகல் இரண்டு மணிக்கு, திருகோணமலை மாவட்ட செயலக புதிய கேட்போர் கூடத்தில் மக்கள் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதன்போது, மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைக்க முடியும். இந்நிகழ்வில் மாவட்டத்தினை சேர்ந்த அனைத்து நிறுவனங்களின் பிரதானிகளும் கலந்து கொள்வர்.

இந்திய அமைதிப் படை

# படுகொலை செய்த பொதுமக்களுக்கு நினைவேந்தல்

■ நிதர்சன் வினோத்




இந்திய அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை 33 ஆண்டுகளின் பின்னர் நினைவுகூரும் நினைவேந்தல் யாழ்ப்பாணம், புத்தூர், வாதரவத்தையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

1987 ஆம் ஆண்டு, வாதரவத்தைப் பகுதியில் இந்திய அமைதிப் படையினரால் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இறந்த பொது மக்களை நினைவு கூரும் வகையில், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இளையகுட்டி பரஞ்சோதியின் தலைமையில் இறந்தவர்களின் உடைக்கப்பட்ட நினைவு தூபிக்கு அருகில் நினைவேந்தல் இடம்பெற்றது.

அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு தேரம் பிள்ளையார் ஆலயத்தில் மோட்ச அர்ச்சனை செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகள், மனைவி மற்றும் உறவினர்கள் ஆகியோரால் பொதுச்சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# நுவரெலியாவில் மரநடுகை



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நுவரெலியா கிறகரி வாவி கரையில் மரம் நடுகை வேலைத்திட்டம் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் பணிப்புரையின் கீழ் நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளரும் நுவரெலியா மாநகர சபை விசேட ஆணையாளருமான திருமதி சுஜீவ போதிமான தலைமையில் செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்றது.

நுவரெலியா மாவட்ட செயலகம், நுவரெலியா மாநகர சபை, மத்திய மாகாண சுற்றாடல் பாதுகாப்பு திணைக்களம், நுவரெலியா பிரதேச செயலகம், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் ஆகியன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

(எஸ்.கே குமார்)

# செவிக்கு இனிப்பாக இருந்தாலும் வாய்க்கு பூட்டுப் போட்டுள்ளது

ஜனரஞ்சக அறிவிப்புகள், விலைக்குறைப்புகள், மக்கள் நலன்சார் திட்டங்கள், சலுகைகள் தொடர்பிலான அறிவிப்புகள் தொடர்ச்சியாக விடுக்கப்படுமாயின், மிக அண்மையில் தேர்தலொன்று வரப்போகின்றது என்பதே உள்ளார்ந்த அர்த்தமாகும். அதற்கான தயார்படுத்தலை செய்துகொண்டுதான் ஆட்சியில் இருக்கும் அரசாங்கங்கள் வாக்காளர்களை வளைத்துப்போட மனக்குளிர் அறிவிப்புகளை விடுக்கும்.

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்திருந்த காலத்தில், நாளைக்கு கண்விழித்து எழும்பும் போது என்னென்ன பொருட்களின் விலைகள் அதிகரித்திருக்குமோ என்ற சந்தேகத்துடனேயே எழும்ப வேண்டும். எரிபொருட்களின் விலைகள், சமையல் எரிவாயுவின் விலைகள் அதிரிக்கப்பட்ட மறுநிமிடத்தில் அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளின் கட்டணங்கள் அதிகரித்துவிடும்.

தற்போதைய நிலைமை சற்று மாறியுள்ளது. ரொக்கெட் வேகத்தில் அதிகரிக்கப்பட்ட பொருட்களின் விலைகள் ஆமை வேகத்தில் குறைக்கப்படுகின்றன. எனினும், அவையாவும் சாமான்ய மக்களிடத்தில் சென்றடையவில்லை.

பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படக்கூடும் என்ற தகவல் கசிந்தவுடன், அந்தப் பொருட்களை பதுக்கிவைத்து, ரொக்க இலாபத்துக்கு விற்பதிலேயே பெரும் முதலைகள் குறியாக இருக்கின்றனர். ஆனால், பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டால், பழைய பொருட்களே கையிருப்பில் உள்ளன. விலைத்திருத்தத்தின் பிரகாரம் புதிய பொருட்கள் சந்தைக்கு வரவில்லையென மழுப்பிவிடுகின்றனர்.

சமையல் எரிவாயுவின் விலைகள் அண்மையில் குறைக்கப்பட்டன. எனினும், தங்களுடைய கையிருப்பில் இருப்பவை பழைய விலைக்கு உரியவை. அதனை புதிய விலைக்கு விற்பனை செய்யமுடியாதென பல வர்த்தகர்கள் கூறியிருக்கின்றனர். இன்னும் சிலர், யாராவது கட்டாயம் கேட்பார்கள் என பதுக்கிவைத்து பழைய விலைக்கே விற்பனை செய்கின்றனர்.

ஆகையால், என்னதான் விலைகள் குறைக்கப்பட்டாலும் அவை சாமான்ய மக்களை சென்றடையவில்லை. மறுபுறத்தில், மரக்கறிகள், பழங்களின் விலைகள் வானத்தை எட்டுமளவுக்கு உயர்ந்துள்ளன.

காஸ் தட்டுப்பாடு ஏற்படும் போதும், விலை அதிகரிக்கப்படும் போதும், காஸின் ஊடாகவே பேக்கரி பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன என விளக்கமளிக்கும் பேக்கரிகளின் உரிமையாளர்கள் சிலர், எரிவாயுவின் விலை குறைந்துவிட்டால், தங்களிடமிருக்கும் போரணைகளை விறகுகளால் ஆனவை என்பர்.

இதற்கிடையே ஐக்கிய அமெரிக்க டொலரின் விலை சடுதியாக குறைந்துக்கொண்டு வருவதால், வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்று, இலங்கைக்கு பணத்தை அனுப்பும் வீட்டுப் பணிப்பெண்கள் உட்பட பலரும், தங்களுடைய சம்பளத்தின் பெறுமதி குறைந்துவிடுகின்றது என்ற அச்சத்தில், சம்பளத்தையே அனுப்பாமல் விட்டுள்ளனர்.

இது, அவர்களை தங்கியிருக்கும் குடும்பத்துக்கு பெரும் சுமையை ஏற்படுத்தும். பணிப்பெண்களுக்கும் மன உளைச்சல் உண்டாகும். அந்த நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்தமுடியாது. எனினும், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைத்து, அவை சாதாரண மக்களுக்கு கிடைக்கும் வகையில் வழிசமைத்துக்கொடுக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விலைக்குறைப்புகள் செவிக்கு இனிப்பாக இருந்தாலும், பல வேளைகள் பலரும் பட்டினியால் கழிக்கின்றனர் என்பதே நிதர்சனம்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


கருத்துச் சுதந்திரமும்

# நாட்டாஷாவும் ஞானசாரரும்



எம்.எஸ்.எம் ஐயூப்

பௌத்த மதத்தை அவமதிக்கும் சதியொன்று செயற்பட்டு வருவதாகவும், அதன் பின்னால் வெளிநாட்டு சக்திகள் இயங்குவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது. அதன் பிரகாரம், ஏற்கெனவே சேபால் அமரசிங்க என்ற சமூக ஊடக செயற்பாட்டாளர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அதன்பின்னர், மகாநாயக்க தேரர்களிடம் சேபால் அமரசிங்க மன்னிப்பைக் கோரியதை அடுத்து, விடுதலை செய்யப்பட்டார்.

கிறிஸ்தவ மத போதகரான ஜெரோம் பெர்னாண்டோவும் அதே குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படுவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. அண்மையில், அவருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், அதற்கு சில மணி நேரத்துக்கு முன்னர், அவர் வெளிநாட்டுக்குப் புறப்பட்டு சென்றுவிட்டார். இப்போது அவர் தம்மைக் கைது செய்வதை தடைசெய்யுமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அத்தோடு, நகைச்சுவை மேடைப் பேச்சாளரான நாட்டாஷா எதிரிசூரிய என்ற பெண், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் புத்தரை அவமதித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்படுவதற்கு முன்னர், "சம்பந்தப்பட்ட தனது நகைச்சுவை நிகழ்ச்சியால், எவரும் புண்படுத்தப்பட்டு இருந்தால், மன்னித்து விடுங்கள்" என்று கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், வெளிநாட்டுக்கு புறப்பட்டு செல்கையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவரும் கைது செய்யப்பட்டார்.

இவர்களில், சேபால் அமரசிங்கவும் நாட்டாஷாவும் பௌத்தர்களாவர். சேபால் தமது 'யூடியுப்' உரையொன்றின் போது, கண்டியிலுள்ள தலதா மாளிகையை அவமதிக்கும் வகையில் பேசியிருந்தார். ஒரு சமயத் தளத்தை குறிப்பிடுவதற்கு பொருத்தமற்ற சொல்லொன்றை பாவித்தமையே அவர் செய்த குற்றமாகும்; அதை நியாயப்படுத்த முடியாது.

ஜெரோம் பெர்னாண்டோ, தமது சமய பிரசங்கத்தில் புத்தரையும் இயேசு நாதரையும் ஒப்பிட்டு பேசியிருந்தார். ஆங்கிலத்தில் குறித்த உரையை நிகழ்த்திய அவர், புத்தர் enlightment என்ற நிலையை (புத்தத்துவத்தை) அடைந்ததாகவும் ஆனால் இயேசுவோ light (ஒளி) ஆகவே இருக்கிறார் என்றும் பேசினார். எனவே, புத்தரும் இயேசுவையே அடைந்ததாகவும் அவர் வாதாடினார். இதன் மூலம், புத்தர் சிறுமைப்படுத்தப்பட்டுவிட்டார் என்பதே பௌத்தர்கள் சிலரது வாதமாகும்.

உண்மையிலேயே, ஜெரோம் பெர்னாண்டோவின் வாதமே பிழையானது. ஏனெனில், அவ்வாறு ஆங்கிலத்தில் மட்டுமே வாதிட முடியும். புத்தத்துவத்தை light என்ற அடிச் சொல் வரும் விதத்தில் ஆங்கிலத்தில் மட்டுமே குறிப்பிட முடியும். ஆயினும் புத்தத்துவம் என்ற எண்ணக்கருவுக்கும் light (ஒளி) என்ற எண்ணக்கருவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எனவே அவர் light என்ற சொல்லை பாவித்து புத்தரையும் இயேசுவையும் ஒப்பிட்டமை எவ்வித தத்துவார்த்த அடித்தளமும் இல்லாத விடயமாகும். அதேபோல் சமயங்களையும் சமயத் தலைவர்களையும் பகிரங்க மேடையில் ஒப்பிடுவதே மனங்கள் புண்படும் செயலாகும்.

நாட்டாஷா திறமையான நகைச்சுவை பேச்சாளர். அவரது சர்ச்சைக்குரிய உரை கடந்த ஏப்ரல் மாதம் பிஷப் கல்லூரி அரங்கில் நடத்தப்பட்டதாகும். ஆனால் அது கடந்த மாதம் இறுதியிலேயே வைரலாகியது. பிள்ளை வளர்ப்பதில் குடும்பங்களுக்கிடையில் இருக்கும் போட்டியின் காரணமாக சில தாய்கள் தமது பிள்ளைகளை பிற பிள்ளைகளுடன் ஒப்பிட்டு தமது பிள்ளைகளை குறைகூறுவார்கள். பெண்கள் இவ்வாறு கூறுவதை சுட்டிக் காட்டிய நாட்டாஷா, தாய்மார்களின் இந்தப் பழக்கத்தால் புத்தருடைய இளம் பருவத்தில் ஏனைய பிள்ளைகள் என்ன பாடுபட்டு இருப்பார்கள் என்று கூறி அதனை விவரித்தார்.

சித்தார்த்தன் பிறந்த உடன் எழுந்திருந்து ஏழு அடி நடந்து சென்றதாகவும் அவர் அவ்வாறு அடி எடுத்து வைக்கும் இடமெல்லாம் தாமரைகள் உதித்து அவரது பாதங்களை ஏற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. அதேபோல் அவர் பிறந்த உடனே "நானே உலகினில் உயர்ந்தவன்; நானே உலகுக்கு சிரேஷ்ட புருஷன்; நானே உலகினில் உன்னதமானவன்; இந்த ஆன்மாவுக்குப் பின்னர், நான் இனி பிறப்பதில்லை" என்று பாளி மொழியில், கவிதை வடிவில் கூறியதாகவும் கூறப்படுகிது. சித்தார்த்தன் பிறந்த சில நாள்களில், தாம் புத்தத்துவத்தை அடைவதை சமிக்ஞை மூலமாக தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அக்காலத்து தாய்மார் சித்தார்தனோடு தமது பிள்ளைகளை எப்படியெல்லாம் ஒப்பிட்டு, அந்தச் சிறுவர்களை சித்திரவதை செய்திருப்பார்கள் என்று நாட்டாஷா நகைச்சுவையோடு விவரித்தார்.

"சுத்தோதனவின் மகன் பிறந்த உடன் நடந்து சென்றிருக்கிறார். இவனை கையில் தூக்கி வைத்துக் கொண்டாலும் கழுத்து சரிகிறது. சுத்தோதனவின் மகன் பிறந்தவுடன் கவிதையையும் பாடியிருக்கிறார். இவனுக்கு இன்னமும் குரலே வராது என்றெல்லாம் அந்தக் காலத்து தாய்மார், தமது பிள்ளைகள் மீது பெரும் அழுத்தத்தைப் பிரயோகித்து இருப்பார்கள்" என்று நாடக பாணியில் நாட்டாஷா கூறினார். அவர், உண்மையிலேயே பிள்ளைகளை ஒப்பிடும் தாய்மார்களையே கேலி செய்கிறார்.

ஆனால், அக்கால பெண்கள் இவ்வாறெல்லாம் கூறியிருப்பார்கள் என்று கூறும்போது, 'பொடியன்', 'சின்னவன்' போன்ற வாரத்தைகளால் சித்தார்தனை குறிப்பிட்டு இருப்பார்கள் என்றே கூறுகிறார். புத்தரின் சிறுபராயத்தை குறிப்படும் போது, இதுபோன்ற சொற்களை பாவிப்பது புத்தரை அவமதிப்பதாகும் என்பதே அவரை எதிர்க்கும் பெரும்பாலானவர்களின் வாதமாகும். அதேவேளை வேறு சிலர் இதன் மூலம் நாட்டாஷா சித்தார்த்தவின் அற்புதங்களையே சவாலுக்குள்ளாக்கியிருக்கிறார் என்று வாதிடுகிறார்கள்.

புத்தரின் காலத்தில் வாழ்ந்த தாய்மார்களே அந்த வார்த்தைகளை பாவித்ததாக நாட்டாஷா கூறினாரேயல்லாமல் அவர் சித்தார்த்த இளவரசனை அவ்வாறு குறிப்பிடவில்லை என்று சிலர் வாதிடலாம். ஆனால், அது நாட்டாஷாவின் வாயாலேயே வெளியாகிறது. எந்தவொரு சமயத்தவரும் தமது சமய ஸ்தாபகரையோ அல்லது சமயத்தலைவர்களையோ அவ்வாறான சொற்களால் குறிப்பிடுவதை கேட்க விரும்புவதில்லை. அது அவர்களது உணர்வுகளை பாதிக்கிறது.

1988 ஆம் ஆண்டு இஸ்லாத்தையும் முஹம்மது நபியையும் (ஸல்) அவரது மனைவிமார்களையும் அவமதித்து சல்மான் ருஷ்தி என்ற எழுத்தாளர் எழுதிய Satanic Verses என்ற நாவலை இது எமக்கு நினைவூட்டுகிறது. அந்த நாவலில் வரும்; விபச்சாரிகளுக்கு அவர் நபிகளாரின் (ஸல்) மனைவிமார்களின் பெயர்களையே சூட்டியிருக்கிறார்.

நாட்டாஷாவின் உரையில் இடம்பெற்ற தவறு திட்டமிட்ட அவமதிப்பு அல்ல; அது ஒரு தற்செயல் என்றோ அல்லது சிந்திக்காமல் பாவித்த சொற்கள் என்றோ கூறலாம். ஆனால், சல்மான் ருஷ்தியின் நாவல் திட்டமிட்ட நிந்தனை என்பது தெளிவானது. எனினும் இலங்கையில் பலர் நாட்டாஷா செய்தது மத நிந்தனை என்றும் சல்மான் ருஷ்தி தமது கருத்துச் சுதந்திரத்தையே பாவித்துள்ளார் என்றும் வாதிடுகிறார்கள். இன்று மத நிந்தனையைப் பற்றிப் பேசுபவர்கள் பலர் ஞானசார தேரரின் மத நிந்தனைகளையும் வரவேற்றார்கள்.

நாட்டாஷாவும் கருத்துச் சுதந்திரத்தையே பாவித்தார் என்று பலர் வாதிடுகிறார்கள். அவருக்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாடொன்றில் உரையாற்றிய சிலர் நிந்தனைக்கும் மற்றவர்களை புண்படுத்துவதற்கும் கருத்துச் சுதந்திரத்தின் கீழ் உரிமை இருக்கிறது என்றும் வாதிட்டார்கள். மதங்களை கேள்விக்குள்ளாக்குவது உரிமையாகும் என்றும் அங்கு கூறப்பட்டது.

அரசியல் ரீதியாக மிகவும் மோசமான நிலையில் உள்ள இலங்கையின் ஆளும் கட்சியினர் மீண்டும் தமது அதிகாரத்தை பலப்படுத்திக் கொள்வதற்காக செபால், ஜெரோம், நாட்டாஷா ஆகியோரின் கூற்றுகளைப் பாவித்து துவேஷத்தை தூண்ட பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதையும் காண முடிகிறது. நிந்தனைக்கும் உரிமை இருக்கிறது என்ற நாட்டாஷாவின் சில ஆதரவாளர்களின் கூற்றுகள் அந்த ஆளும் கட்சியினருக்கு தீனி போடுவதாகும்.

நல்ல நோக்கத்தோடு மத போதனைகளை கேள்விக்குள்ளாக்கி ஆராய்வதை எதிர்க்க முடியாது. ஆனால், அதனை பொருத்தமான இடத்திலும் நேரத்திலுமே செய்ய வேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தின பயங்கரவாத தாக்குதலை அடுத்து முஸ்லிம்கள் பெரும்பான்மை சமூகத்தவரின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்ததைப் போன்ற நேரங்களில் பாதிக்கப்பட்ட சமூகத்தின் நம்பிக்கைகளைக் கேள்விக்குரியதாக்குவது சமய ஒடுக்குமுறையை ஊக்குவிப்பதாகும். புத்திஜீவிகள் என்று கூறிக்கொள்ளும் சிலர் அன்று அவ்வாறு செய்தார்கள்.

அதேவேளை அறிவுபூர்வமான விவாதத்துக்கும் பகிரங்க விவதத்துக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறிந்தே இந்த விடயம் விவாதிக்கப்பட வேண்டும். பகிரங்க விவாதம் அறிவுபூர்வமானதல்ல. அது வன்செயல்களுக்கும் இட்டுச் செல்லலாம். பகிரங்க விவாதத்தின் போது எவரும் தவறாக இருந்தாலும் தமது பிடியை கைவிட விரும்புவதில்லை.

தமிழ்நாடு அரசாங்கம் 1982 ஆம் ஆண்டு நடராஜ சிலையொன்றின் உரிமையை கோரி இலண்டன் நீதிமன்றில் வழக்காடியது. விசாணையின் போது நீதிமன்ற ஊழியர் ஒருவர், சிலையின் காலால் அதனை தொங்கவிட்டுக் கொண்டு நீதிமன்ற அறைக்கு கொண்டு வந்தார். அதனைக் கண்ட நீதிபதி "உமக்கும் எனக்கும் இது வெறும் சிலையாக இருக்கலாம். ஆனால், இதனை கேட்டு வழக்காடும் தமிழ்நாட்டில் ஐந்து கோடி மக்களின் உணர்வுகளை மதிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்" என்றார்.

கருத்துச் சுதந்திரத்துக்கான வரம்பையும் அந்த அறிவுரை சுட்டிக் காட்டுகிறது.



## வாழ்வியல் தரிசனம்

கொள்ளையர்களின் பேச்சுகள் கூட, சிலருக்கு உபதேசமாகத் தெரிவதுண்டு. தங்களுக்கான நலன்களைப் பெற்றிட, கண்டவர்களையும் தலைவர்களாக மதிக்கிறார்கள்.

மேடையில், பொதுவெளியில், எந்தவிதமான ஒழுக்கமும் அற்றவர்கள் தேனிலும் இனிமையாகக் கதைத்து, மக்களை மருட்டுகின்றார்கள். ஆனால், இவர்களின் அந்தரங்கங்களை மக்கள் அறிவார்கள். ஒருசிலர் மட்டுமே, கேடுகெட்டவர்களின் பேச்சில் மதிமயங்கிக் கிடப்பார்கள்.

எதிர்காலம் குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும். இன்று உலகம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. காலமாற்றங்கள் இதில் முக்கியமானவை. மக்கள் தொகை அதிகரித்தல், பொருளாதாரத் தளம்பல்கள் எனப் பல விடயங்களை நாங்கள் அறிவோம்.

இந்த நிலையில் வளங்கள் இருந்தும், ஆட்சியாளர்களின் தவறான முடிவுகள், சுரண்டல்களால் எமது நாடு பெரும் பிரச்சினைகளுக்குகள் அமிழ்ந்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம், கள்ளக்கடத்தல்கள் எனப் பலவாறான அசுர காரியங்கள், எமது நாட்டைச் சீரழித்து வருகின்றன. என்ன கொடுமை இது?

உணர்வற்ற நிலையில் மக்கள்! இந்த நிலை மாற மக்கள் என்ன செய்வது எனத் திணறுகின்றனர். மக்களிடையே பேதங்கள் அகலவேண்டும். ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

அநுராதபுரம் மாவட்டத்தில்

### படைப்புழுக்களின் தாக்கம் அதிகரிப்பு

அநுராதபுரம் மாவட்ட நாச்சியாதீவு விவசாய பிரிவில் இம்முறை செய்கை பண்ணப்பட்டுள்ள நெல் வேளாண்மை நிலங்களில் படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது எனவும் இதனால் பயிர்கள் அழிவுறும் நிலையில் காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

ஹிதோகம விவசாய வதிவிடப் பிரிவின், சிராவஸ்திபுர விவசாய சேவை மத்திய நிலைய நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட நாச்சியாதீவு அல் அக்ஷா விவசாய கழக மேற்பார்வையின் கீழ் வரும் சுமார் 430 ஏக்கர் வயல் நிலங்களில் இப்புழுக்கள் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சிறுபோகத்தின் போது, செய்கை பண்ணப்பட்டு சுமார் 21 நாள்கள் கடந்த நிலையில், வேளாண்மை பயிர்களை அழித்துவரும் இப்படைப்புழுக்களை கிருமிநாசினிகளைக் கொண்டு இலகுவில் அழித்துவிட முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதிக்கு விஜயம் செய்து, நேரில் இதுபற்றி ஆராய்ந்து, உரிய தீர்வை வழங்க வேண்டும் என நாச்சியா தீவு விவசாயப் பிரிவு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

சீனித்தம்பி இராகுலன்

# மறக்கப்பட்ட ஒரு மங்கை

## இராமநாதன் கல்லூரியின் முதல் அதிபர்



கா. இந்திரபாலா





ஜூலை 07, 1860. பிரித்தானியப் பேரரசின் பெருநகராகிய இலண்டனின் ஒரு மூலையில், வைத்தியர் குடும்பம் ஒன்றில் ஒரு பெண்குழந்தை பிறந்தாள். விக்டோரியா மகாராணி, பிரித்தானியப் பேரரசின் தலைவியாகவும் இந்திய சாம்ராச்சியத்தின் பேரரசியாகவும் விளங்கிய காலம் அதுவாகும். எனினும், பெண்களின் நிலை சமூகத்தில் மிகவும் தாழ்வடைந்து காணப்பட்டிருந்தது.

பல துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருந்த பிரித்தானியாவில், பெண்களுக்கு முன்னேற வசதிவாய்ப்புகள் இல்லை. பாடசாலைப் படிப்புக்கு வாய்ப்பில்லை; பல்கலைக்கழகத்துக்கு அனுமதி இல்லை; அரசியலில் வாக்குரிமை இல்லை; பெரும்பாலான பெண்களுக்கு எழுத்தறிவே இல்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், மேற்குறிப்பிட்ட பெண்குழந்தை, பாடசாலைக்குச் சென்று, பல்கலைக்கழகத்தில் படித்து, பெண்களைக் கட்டுப்படுத்திய சமூகக்கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்து, நாட்டில் பெண் விடுதலைக்காகப் போராடி, இறுதியில் பெண் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் ஆர்வமுடையவரானார். இவர், யாழ்ப்பாணம் வந்து, இலங்கையில் இந்துப் பெண் பிள்ளைகளின் கல்விக்காக அமைக்கப்பட்ட முதலாவது நிறுவனமாகிய இராமநாதன் கல்லூரியின் முதல் அதிபராகப் பொறுப்பேற்றார்.

### புளோரென்ஸ் பார்

யார் இந்தப் பெண்மணி? இவர் பெயர் புளோரென்ஸ் பார் (*Florence Farr*). இவர் தாயார் மேரி எலிஸபெத்; தந்தையார் வில்யம் பார். பெண்ணுரிமைகளை ஆதரித்த ஒருவர் தந்தையாக இருந்தமையால் புளோரென்ஸ் *Cheltenham Ladies College* என்ற பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்பைப்பெற்றார்.

1868இல் முதல்முறையாக இங்கிலாந்தில் ஒரு பல்கலைக்கழகம் பெண்களை அனுமதிப்பதற்கு முன்வந்தது. அது இலண்டன் பல்கலைக்கழகம். இருந்தபோதிலும், அவர்களுக்குப் பட்டம் (*degree*) வழங்கவில்லை; சான்றிதழ் மட்டுமே கொடுக்கப்பட்டது. 1878இல் இருந்துதான் பெண்களுக்கும் பட்டம் வழங்கும் அதிகாரம் இலண்டன் பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்தது. பாடசாலைக் கல்வியை முடித்த புளோரென்ஸ், இலண்டன் பல்கலைக்கழகத்தில் படிப்பைத் தொடர்ந்தார்.

### வாழ்க்கைத் தொழில்

பல்கலைக்கழகத்துப் பரீட்சை முறைகளையும் பிற அம்சங்களையும் விரும்பாத புளோரென்ஸ், படிப்பை முடிக்காது வெளியேறி ஓர் ஆசிரியராகத் தன் தொழில் வாழ்க்கையைத் தொடங்கினார். இரண்டு ஆண்டுகளில் அத்தொழிலையும் விட்டு, கலைத்துறையை நாடினார். அவருக்குக் கலைகளில், சிறப்பாக இசை, ஓவியம், நாடகம் ஆகியவற்றில், அதிக ஆர்வம் இருந்தது. அழகிய தோற்றமும் நடிப்புத்திறனும் பெற்றிருந்த புளோரென்ஸ் நாடகத்துறைக்குள் நுழைந்தார்.

### புகழ்பெற்ற நடிகர்

தன் நடிப்புத் திறன் காரணமாக, அக்காலத்தில் எழுச்சிபெற்றுக் கொண்டிருந்த பல இளம் நாடகாசிரியர்களுடைய நட்பை புளோரென்ஸ் பெற்றார். அவர்களில் இருவர், புளோரென்ஸின் உற்ற நண்பர்களாகினர். இருவரும் பின்னர், ஆங்கில இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுபவர்கள். ஒருவர், பெர்னாட் ஷோ; மற்றவர், வில்யம் பட்லர் யேற்ஸ்.

### பொன்மய உதயம்

நாடகத்துறையில் சிறந்த நடிகராக விளங்கிய காலத்திலும் புளோரென்ஸ், தன் முதல் குறிக்கோள் ஆகிய பெண் விடுதலையைப் புறக்கணிக்கவில்லை. பெண்களைக் கட்டுப்படுத்தும் விக்டோரிய ஒழுக்கநெறி வழியாகப் பெண்கள் மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் சமூக அமைப்புக்குத் தன்னுடைய பாரம்பரிய மதமும் அதைத் தோற்றுவித்த பின்புலப் பண்பாடுமே காரணம் என்ற முடிவுக்கு புளோரென்ஸ் தன் ஆய்வுகள் மூலம் வந்தார். இதன் விளைவாக, அக்காலத்துப் பிற மேற்கத்திய சீர்திருத்தவாதிப் பெண்கள் சிலரைப்போன்று, இவர் தன் பாரம்பரிய மதத்தில் இருந்து விலகிச் சென்றார்.

பெண்களை அடிமைப்படுத்தாத தொல்கால மதங்கள் இவருடைய கவனத்தை ஈர்த்தன. இதன் விளைவாகத் தொல்கால மதக்கிரியைகளில் ஈடுபட்ட Golden Dawn (பொன்மய உதயம்) என்ற மதக்குழுவில் சேர்ந்தார்.

இதே காலப்பகுதியில் இவர், எட்வர்ட் எமெரி என்ற நடிகரை மணஞ்செய்தார். ஆனால், நான்கு ஆண்டுகளின் பின்னர், கணவர் அமெரிக்காவுக்குச் சென்று திரும்பி வரவே இல்லை. இதன் காரணமாக, புளோரென்ஸ் விவாகரத்துச் செய்துகொண்டார்.



### வேதாந்தத்தில் ஈடுபாடு

இருபதாம் நூற்றாண்டு தொடங்கியபோது, புளொரென்ஸ் கொண்டிருந்த மத நம்பிக்கைகள் மேலும் மாற்றம் அடைந்தன. இறையியலிலும் கீழைத்தேச மதங்களிலும் அவர் கவனம் திரும்பியது.

### பெண்ணின் நூற்றாண்டு

இருபதாம் நூற்றாண்டு உதயமாகியபோது, பிரித்தானியப் பேரரசு உலக வரலாறு கண்டிராத மிகப் பெரிய வலிமை மிக்க பேரரசாகக் காணப்பட்டது. ஆனால், பெண்ணுக்குப் பிரித்தானியாவில் வாக்குரிமையே இல்லை. பெண்களுக்கு உரிமை கோரி நடைபெற்ற போராட்டங்கள் வலுப்பெற்றன. புளொரென்ஸ் இவற்றில் முக்கிய வகிபாகம்கொண்டிருந்தார்.

அவர், 1910இல் எழுதிய நூலொன்றில், 'இருபதாம் நூற்றாண்டு பெண்ணின் நூற்றாண்டாகும்' என அறைகூவினார். "இது பெண்ணின் நூற்றாண்டாகப் போகிறது. இதில் அவள் தன் நீண்ட தூக்கத்தில் இருந்து எழுந்து, தன் இராச்சியத்துக்கு வருவாள்" என்பது அவர் கூற்று.

### இராமநாதனைச் சந்தித்தல்

பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையும் கட்டத்தில், இலங்கையில் பௌத்த மற்றும் இந்துப் பெண் பிள்ளைகளுக்குத் தனியான பாடசாலைகள் இல்லாத குறையை நிவர்த்தி செய்யச் சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவற்றின் விளைவாக 1890இல் பௌத்த மகளிர் பாடசாலை ஒன்று கொழும்பில் நிறுவப்பட்டது.

இதே காலமளவில், இலங்கையின் அரசியலிலும் சமூகத்திலும் பிரமுகராக விளங்கிய பொன்னம்பலம் இராமநாதன், இந்து மகளிர் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு எண்ணம் கொண்டிருந்தார். 1902இல் இராமநாதன் லண்டனுக்குச் சென்று, இந்து மதத் தத்துவங்கள் பற்றி விரிவுரைகள் ஆற்றியபோது, புளோரென்ஸ் அவரைச் சந்தித்து உரையாட வாய்ப்புக்கிட்டியது. அப்பொழுது இராமநாதன், இந்துப் பெண்களுக்கு ஒரு பாடசாலை அமைக்க, தான் கொண்டிருந்த திட்டத்தை வெளிப்படுத்தினார்.

அப்படி ஒரு பாடசாலையை அமைக்கும் திட்டம் நிறைவேறிய காலத்தில், அப்பாடசாலையில் பணியாற்றத் தான் விரும்புவதாக இராமநாதனிடம் கூறினார் புளோரென்ஸ். பத்து ஆண்டுகளின் பின்னர், 1912இல், இந்து மகளிருக்கான பாடசாலை கட்டப்பட்டு முடியும் தறுவாயை அடைந்தது. இச்செய்தியை புளோரென்ஸ் அம்மையாருக்கு இராமநாதன் அறிவித்தார்.

உடனே புளோரென்ஸ் இலங்கைக்கு புறப்படத் தயாரானார். தனக்கு இருந்த சொத்துகள் அனைத்தையும் விற்று, நண்பர்களையும் விட்டு, செப்டெம்பர் 1912இல் கப்பல் ஏறி இலங்கைக்கு வந்தார்.

### பாடசாலை அதிபர்

1913 ஜனவரி 20இல், சுன்னாகத்தில் அமைக்கப்பட்ட இந்து மகளிருக்கான இராமநாதன் கல்லூரி திறக்கப்பட்டது. இந்துப் பெண் பிள்ளைகளுக்காக இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது பாடசாலையில், முதல் அதிபராக புளோரென்ஸ் அம்மையார், திருமதி புளோரென்ஸ் பார் எமெரி (*Mrs. F.F. Emery*) என்ற பெயருடன்அறிமுகமானார்.

மேற்கத்திய பண்பாடு மெதுவாகப் பரவிக்கொண்டிருந்த அக்காலத்தில், பாரம்பரியப் பண்பாட்டைப் பேணுவதற்குப் பெண் கல்வி அவசியம் என இராமநாதன் நம்பினார். தனது பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் மதத்தையும் கற்றறிந்த பெண், தன் பிள்ளைகளைத் தேசிய பண்புகளை இழந்தோராய், மேற்கத்திய பண்பாட்டில் மோகம் கொண்டோராய் மாறுவதைத் தடுக்க உதவுவாள் என்பது அவர் கொள்கை. இதற்கான கல்வியைப் பெண்ணுக்குக் கொடுப்பதற்குப் பாரம்பரிய குருகுல வாசமுறைப்படி இயங்கும் ஒரு பாடசாலையாக இராமநாதன் கல்லூரியை அமைத்தார்.

இத்தகைய பாடசாலையில், புளோரென்ஸ் அம்மையார், நீண்ட காலம் பணியாற்றும் வாய்ப்பைப் பெறவில்லை. 1916 இறுதியில் புற்றுநோய் அவரைப் பீடித்தது. நோயைத் தீர்ப்பதற்குக் கொழும்பில் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை பலனளிக்காது போக, புளோரென்ஸ் அம்மையார் 1917 ஏப்பிரலில் காலமானார். அவர் கேட்டுக்கொண்டபடி, உடம்பு தகனம் செய்யப்பட்டுக் களனி கங்கையில் சாம்பர் இடப்பட்டது.



# அமைச்சரவை முடிவுகள் சில

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திங்கட்கிழமை (05) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில:...

### நிறுவனமொன்றை தாபித்தல்

தற்போது திரைப்படத் தொழிற்றுறை பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து மிகவும் மோசமான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளதுடன், தொழிற்றுறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஒழுங்குபடுத்தல் பணிகளில் ஈடுபடக்கூடிய சுயாதீன நிறுவனமொன்றை தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், திரைப்படத் தொழிற்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கும், குறித்த தொழிற்றுறையை ஒழுங்குபடுத்துவதற்கும் சுயாதீன நிறுவனமொன்று இருத்தல் பொருத்தமானதெனத் தெரியவந்துள்ளது. அந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### மூலோபாயச் சட்டகம்

இலங்கையில் தொற்றல்லா நோய்கள் காரணமாக இடம்பெறுகின்ற அதிகளவான மரணங்களுக்கு இதய நோய், மாரடைப்பு, புற்றுநோய், நாட்பட்ட சுவாச நோய்கள் மற்றும் நீரிழிவு போன்ற நோய்கள் முக்கிய காரணங்களாக அமைவதுடன், ஒவ்வோர் ஆண்டும் இந்நோய்களால் 120,000 பேர் இறக்கின்றனர். புகையிலைப் பாவனை, சாராயப் பாவனை, அதிகரித்த உடற்பருமன், உயர் குருதியழுத்தம், குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரித்தல் மற்றும் குருதியில் கொலஸ்ரோலின் அளவு அதிகரித்தல் போன்றன இந்நோய்களுக்கான முக்கிய காரணங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன.

அதனால், இந்நோய்களை முற்கூட்டியே கண்டறிவதற்கான பரிசோதனை சேவைகளை வழங்கல் மற்றும் சரியான நேரத்தில் சிகிச்சையளிப்பதற்கு இயலுமாகும் வகையில் சுகாதாரக் கட்டமைப்புகளைப் பலப்படுத்த வேண்டியுள்ளது. குறித்த தேசிய கொள்கை மற்றும் மூலோபாய சட்டகத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### ஏற்புறுதி செய்தல்

1996.09.10 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் முழுமையான அணு ஆய்வுப் பரிசோதனைகளுக்கான தடை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த உடன்படிக்கை மூலம் உலகில் எந்தவோர் இடத்திலும் 'எந்தவோர் அணு ஆயுதப் பரிசோதனைகளை அல்லது அணு வெடிப்புகளை' தடை செய்வதற்கு உறுப்பு நாடுகள் உடன்பாடு தெரிவித்துள்ளன. இதுவரைக்கும் 186 நாடுகள் இவ் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளதுடன், 177 நாடுகள் ஒப்பந்தத்தை ஏற்று அங்கிகரித்துள்ளன. இலங்கை முழுமையான அணு ஆய்வுப் பரிசோதனைகளுக்கான தடை ஒப்பந்தத்தில் 1996.10.24 அன்று கையொப்பமிட்டுள்ளது. இலங்கை தற்போது முழுமையான அணு ஆய்வுப் பரிசோதனைகளுக்கான தடை ஒப்பந்த அமைப்புடன் இணைந்து பயிற்சிகள், இயலளவு விருத்தி, தரவுகள் மற்றும் தகவல்களை விநியோகித்தல் போன்ற துறைகளில் ஒத்துழைப்புடன் செயலாற்றி வருகின்றது. குறித்த ஒப்பந்தத்தை ஏற்புறுதி செய்வதன் மூலம், அணு ஆயுதங்களற்ற உலக அமைதிக்கும் பாதுகாப்புக்குமான செயற்பாட்டாளராக இலங்கையின் இராஜதந்திர வகிபாங்குகளை ஏற்றுக்கொள்வதும், சுனாமி எச்சரிக்கைகள், காலநிலை மாற்றங்கள் மற்றும் நில ஆய்வுகள் போன்றன இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அனுகூலங்களைப் பெற்றுத்தருகின்ற குடிசார் மற்றும் விஞ்ஞான ரீதியான நோக்கங்களுக்கான பயனுள்ள தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இயலுமை கிட்டும். அதற்கமைய, இலங்கை முழுமையான அணு ஆய்வுப் பரிசோதனைகளுக்கான தடை ஒப்பந்தத்தை ஏற்று அங்கிகரிப்பதற்கும், குறித்த ஒப்பந்தத்தின் சட்ட ஏற்பாடுகளை வலுவாக்கம் செய்வதற்காகவும் சட்டம் இயற்றுவதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்குமான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### ஒழுங்குவிதிகள்

இலங்கையில் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப தேசிய அளவீட்டு நியமங்களைப் பேணிச் செல்வதும், பல்வேறு துறைகளுக்கான அளவீட்டு சேவைகளை வழங்குவதும், அளவீடுகளின் அடிப்படையிலான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளின் மூலம் நியாயத்தை உறுதிப்படுத்துவதும், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் முக்கிய பணிகளாகும். அதற்கமைய, 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 3(ஈ) உபபிரிவின் கீழ் தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலையத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2022.06.16 ஆம் திகதி தொடக்கம் அமலாகும் வகையில் அளவீட்டு விஞ்ஞான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியை வெளியிட்டு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த ஒழுங்குவிதியை பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### அவமதித்தல் பற்றிய சட்டமூலம்

'நீதிமன்றத்தை அவமதித்தல்' தவறுகள் பற்றி தெளிவானதும் திட்டவட்டமானதுமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ற நிலைமைகள், எதிர்வழக்குரைப்பு மற்றும் தண்டனைகளைத் தளர்த்துதல் மற்றும் தண்டனைகளைத் தளர்த்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கை முறைகள் உள்ளடங்கலாக 'நீதிமன்றத்தை அவமதித்தல்' பற்றிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக 2022.06.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்பதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தல்

ஹொரணை ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளவு போதாமையால், கழிவுநீர் சூழவுள்ள உபரிநீர்க் கால்வாய்களுக்கு விடுவிக்கப்படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

அதனால், ஹொரணை ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய மேம்படுத்தலின் கீழ் நாளொன்றுக்கு 2,000 கனமீற்றர் கொள்ளவுடைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமொன்றைத் துரிதமாக நிர்மாணிக்குமாறு உள்ளூராட்சி அதிகார சபை இலங்கை முதலீட்டுச் சபையிடம் கோரியுள்ளது. இலங்கை முதலீட்டுச் சபையின் நிதியைப் பயன்படுத்தி இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இலங்கை முதலீட்டுச் சபையின் நிதியில் 1,110 மில்லியன் ரூபாயைப் பயன்படுத்தி ஹொரணை ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### வேலைகளுக்கான ஒப்பந்தம் வழங்கல்

ஸ்ரீலங்கன் விமான சேவையின் ஹனிவெல் துணை மின்வழங்கல் அலகுகளின் திருத்த வேலைகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச போட்டி விலைமுறி கோரல் முறைமையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக மூன்று விலைமுறிகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய, ஹனிவெல் துணை மின்வழங்கல் அலகு திருத்த வேலைகளுக்கான ஒப்பந்தம் 02 வருடங்களுக்கு 15.3 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பீட்டு விலை விவரக்குறிப்புகள் அடங்கிய பதிலளிக்கப்புகளுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுவைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு வழங்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது

### அத்தியாவசிய மருந்துகளின் விலைகளைக் குறைத்தல்

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் மருந்துகளின் விலைகளை நிர்ணயம் செய்தல் மற்றும் அதுதொடர்பான அனைத்து விடயங்களுக்குமான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாய் வீழ்ச்சியடைந்துள்ளமையைக் கருத்தில் கொண்டு, மருந்துகளின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை ஒருசில சந்தர்ப்பங்களில் 97 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்படுகின்ற சமகால பொருளாதார உறுதிப்பாட்டு வேலைத்திட்டத்தின் விளைவாக அமெரிக்க டொலரின் பெறுமதி குறிப்பிடத்தக்களவு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. அதற்கமைய, 60 வகையான மருந்துகளின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை 2023.06.15 தொடக்கம் அமுலாகும் வகையில் 16 சதவீதத்தினால் குறைப்பதற்காகவும், மற்றும் மூன்று மாதங்களுக்கொருமுறை மருந்துகளின் விலைகளை மீளாய்வு செய்வதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கியுள்ளது.

வெனிசுலா

# 12 பேரைப் பலியெடுத்த தங்கச் சுரங்கம்


வெள்ளம் காரணமாக தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 12 பேர் உயிரிழந்த சம்பவம் வெனிசுலாவின் எல் கால்லோ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் கனமழை காரணமாக அங்குள்ள தங்கச் சுரங்கமொன்று இடிந்து விழுந்துள்ளது.

இதனையடுத்து அங்கு தொடர்ச்சியாக மீட்புப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் இதுவரை 12 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் 112 பேர் சுரங்க இடிபாடுகளில் இருந்து தப்பியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உயிரிழந்தவர்கள் அனைவரும் சட்டவிரோதமாக சுரங்கத்தை திறந்து தங்கத்தை தேடும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.





அமெரிக்கா

## 37 குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றிய கர்ப்பிணி

30 க்கும் மேற்பட்ட பாடசாலைச் சிறுவர்களை 8 மாதக் கர்ப்பிணியொருவர் தீவிபத்தில் இருந்து காப்பாற்றிய சம்பவம் அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இம்யூனெக் வில்லியம்ஸ் என்ற குறித்த கர்ப்பிணி பாடசாலையொன்றில் பஸ் சாரதியாகப் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவ தினத்தன்று அவர் 37 சிறுவர்களுடன் பஸ்ஸை செலுத்திச் சென்றுகொண்டிருந்த போது அப்பஸ்ஸில் இருந்து திடீரென புகை வந்துள்ளது.

இதையடுத்து சுதாகரித்துக் கொண்ட அவர், பஸ்ஸை நிறுத்திவிட்டு அதிலிருந்த குழந்தைகளை கீழே இறங்கச் செய்தார். அடுத்த சில வினாடிகளில், குறித்த பஸ் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. தகவலறிந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர். நடக்கப் போவதை உணர்ந்து துணிச்சலுடன் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றிய பெண் சாரதியை பலரும் பாராட்டி வருகின்றனர்.

## 100 ஆண்டுகளுக்கு பின்

100 ஆண்டுகளுக்கு முன் அழிந்து போனதாகக் கருதப்பட்ட அரியவகை பட்டாம்பூச்சியொன்று மீண்டும் தென்பட்டுள்ளமை பிரித்தானியாவில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



இலண்டனில் தென்கிழக்குப் பகுதியில் 'முட்டைக்கோஸ் பட்டாம்பூச்சிகள்' எனப்படும் இனத்தைச் சேர்ந்த குறித்த வண்ணாத்துப்பூச்சிகள் இரண்டாம் சார்லஸ் மன்னரின் காலத்தில் அரிய வகையாக அறிவிக்கப்பட்டன.

பின்னர் 1925ஆம் ஆண்டில் இப் பட்டாம்பூச்சி வகைகள் அழிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீண்டும் இப் பட்டாம்பூச்சிகள் குறிப்பிட்ட சில இடங்களில் தென்பட்டுள்ளதாக பூச்சியியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் 100 ஆண்டுகளுக்குப் பின், அந்த உயிரினங்களைப் பார்ப்பது ஆச்சரியமாக இருந்ததாகவும் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்கா

## 6 இளம்பெண்கள் அடுத்தடுத்து கொலை

ஆறு இளம்பெண்கள் அடுத்தடுத்து கொலை செய்யப்பட்ட சம்பவம் அமெரிக்காவின் ஒரேகான் மாகாணத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த பெப்ரவரியில் போர்ட்லாந்து பகுதியிலுள்ள பிலெசன்ட் பள்ளத்தாக்கில் கிரிஸ்டன் ஸ்மித் என்ற பெண்ணின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

தொடர்ந்து ஏப்ரல் 8ஆம் திகதி, கிளார்க் கவுன்டியிலுள்ள ஒரு பாழடைந்த பகுதியில் காயங்களுடன் ஒரு பெண்ணின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. அதே மாதத்தில், மேலும் இரு பெண்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

இறுதியாக, ஏப்ரல் 30 ஆம் திகதி, நார்த்வெஸ்ட் போல்க் கவுன்டியில், ஒரு பெண்ணின் உடல் கண்டெடுக்கப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் முதல் ஒரே சுற்றுவட்டாரத்தில் 6 பெண்கள் அடுத்தடுத்து மர்மான முறையில் கொலை செய்யப்பட்டுள்ள நிலையில், இக் கொலைகள் அனைத்திற்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா, தொடர் கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.



கர்நாடகா

## ஜூன் 11 முதல் பெண்களுக்கு அது இலவசம்

எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் கர்நாடகத்தில் மகளிருக்கான இலவச பஸ் போக்குவரத்துத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஸ்மார்ட் அட்டையை இணையத்தில் விண்ணப்பித்துப் பெற வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் அரசு தேர்தல் பிரசாரத்தில் அளித்த 5 வாக்குறுதிகளில் மகளிருக்கான இலவச பஸ் பயணத்திட்டமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.



பெண்களுடன் மூன்றாம் பாலினத்தவரும் இந்தப் பயன்பாட்டை பெறலாம் என்றும் அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தான்

## சிப்ஸ் கொடுத்து 6 மாணவிகள் பாலியல் வன்புணர்வு

### தலைமை ஆசிரியர் கைது

சொக்லேட் மற்றும் சிப்ஸ் கொடுத்து 6 சிறுமிகள் தலைமை ஆசிரியரால் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் ராஜஸ்தானில் இடம்பெற்றுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் துங்கர்பூர் மாவட்டத்தில் உள்ள அரச பாடசாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆசிரியர் 8 முதல் 12 வயதுடைய சிறுமிகளையே வன்கொடுமை செய்துள்ளார் எனவும் பாடசாலை விடுமுறையில் இருந்த குறித்த ஆறு சிறுமிகளையும் விளையாட அழைத்து செல்வதாகக் கூறி, தனது காரில் வீட்டிற்கு அழைத்து சென்று சொக்லெட், சிப்ஸ் மற்றும் பிஸ்கட் சாப்பிடக் கொடுத்து, பாலியல் பலாத்காரம் செய்து வந்துள்ளார் எனவும் இதற்கு சம்மதம் தெரிவிக்காத சிறுமிகளை மிரட்டி வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமிகளில் ஒருவர் இது குறித்த தனது பெற்றோருக்கு தெரியப்படுத்தியுள்ள நிலையில், அதிர்ச்சியடைந்த அவர்கள் உடனடியாக இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இதனையடுத்து அவ் ஆசிரியரைக் கைது செய்த பொலிஸார், இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இன்று மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி:

# தொடரைக் கைப்பற்றுவது யார்?



இலங்கை, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது ஹம்பாந்தோட்டையில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஆப்கானிஸ்தானும், இரண்டாவது போட்டியில் இலங்கையும் வென்ற நிலையில், தீர்மானமிக்க போட்டியாக இப்போட்டி அமையவுள்ள நிலையில் இலங்கையணியில் மாற்றமெதுவும் இருக்காது என நம்பப்படுகின்றது.

மறுபக்கமாக இப்போட்டியிலும் ஆப்கானிஸ்தானின் நட்சத்திர வீரரான ரஷீட் கான் விளையாடுவது சந்தேகத்துக்கிடமானதாகவே காணப்படுகின்ற நிலையில் அவ்வணியிலும் மாற்றமெதுவும் இருக்காதென்றே நம்பப்படுகின்றது.

குறிப்பாக ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர்கள் எதிர் இலங்கையின் துடுப்பாட்ட வீரர்களிலேயே தொடரின் முடிவு தீர்மானிக்கப்படப் போகிறது.



## றியல் மட்றிட் செல்லும் அல்போன்ஸோ டேவிஸ்

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் பின்களவீரரான அல்போன்ஸோ டேவிஸைக் கைச்சாத்திடுவது குறித்து ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட் விசாரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் 22 வயதான டேவிஸ் கழகத்திலேயே தொடருவார் என மியூனிச்ச் எதிர்பார்க்கிறது. தனது ஒப்பந்தத்தை நீடிக்க டேவிஸ் மறுத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவா, அவுஸ்திரேலியாவா?

## இன்று உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி, ஓவலில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள நிலையில் அவுஸ்திரேலியாவும் இந்தியாவும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

ஏறத்தாழ இரண்டும் சமபலமுள்ள அணிகளாவே காட்சியளிக்கும் நிலையில், காயம் காரணமாக ஜஸ்பிரிட் பும்ரா, றிஷப் பண்டை இந்தியா இழந்துள்ளமை அவ்வணிக்கு பின்னடைவாகவே காணப்படுகின்றது.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் இரண்டாவது சுழற்பந்துவீச்சாளரா அல்லது வேகப்பந்துவீச்சு சகலதுறைவீரரா என நோக்கையில் ஸ்டீவ் ஸ்மித்தை மீண்டும் மீண்டும் ஆட்டமிழக்கச் செய்கின்றமை



காரணமாக இரவிச்சந்திரன் அஷ்வின் அணியில் இரவீந்திர ஜடேஜாவோடு இடம்பெறுவார் எனக் கருதப்படுகிறது.

இதேவேளை, மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ் விளையாடுவது உறுதியென்ற நிலையில் உமேஷ் யாதவ் மூன்றாவது வேகப்பந்துவீச்சு தெரிவாக இருக்குமென்றபோதும் ஷர்துல் தாக்கூரின் துடுப்பாட்டமானது அவருக்கு சிறிது சாதகத்தை வழங்கலாம்.

இந்நிலையில், ஸ்ரீகர் பாரத்தே விக்கெட் காப்பாளராக இந்தியாவின் இறுதி டெஸ்ட் போட்டிகளில் கடமையாற்றியபோதும் இஷன் கிஷனுக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.

மறுபக்கமாக அவுஸ்திரேலிய அணியில் ஜொஷ் ஹேசில்வூட்டின் இடத்தில் ஸ்கொட் போலண்ட் களமிறங்குவார் என அணித்தலைவர் பற் கமின்ஸ் நேற்று உறுதிப்படுத்தியிருந்தார்.

இப்போட்டியானது இந்தியத் துடுப்பாட்டவீரர்களுக்கும், அவுஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களுக்கும் இடையிலான மோதலாகவே இருக்கப் போகின்றது.



## பயேர்ண் மியூனிச்சுக்குச் செல்லும் றபின்ஹா?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான றபின்ஹாவைக் கைச்சாத்திடுவது குறித்து ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான றபின்ஹா கருத்திற் கொள்வதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் றபின்ஹாவைக் கைச்சாத்திடுவதற்குப் பதிலாக தமது பின்களவீரர் பெஞ்சமின் பவார்ட்டை உள்ளடக்குவதற்கும் ,மியூனிச் தயாராவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மீண்டும் டெஸ்ட்களில் ஆடுகிறாரா மொயின்?

அவுஸ்திரேலியாவுக்கெதிரான ஆஷஸ் தொடருக்காக டெஸ்ட் போட்டிகளுக்கு மீளத் திரும்புவது குறித்து இங்கிலாந்தின் சுழற்பந்துவீச்சு சகலதுறைவீரரான மொயின் அலி கருத்திற் கொள்கிறார்.

கடந்த 2021ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற மொயின், ஜேக் லீச் ஆஷஸில் காயத்தால் விளையாட முடியாமற் போயுள்ள நிலையில் அவசரநிலைக்கு பதிலளிக்குமாறு இங்கிலாந்து முகாமைத்துவத்தால் அணுகப்பட்டுள்ளார்.



கடந்த பருவகாலத்திலும் ஓய்விலிருந்து மீள வருமாறு இங்கிலாந்தின் டெஸ்ட் போட்டிகளுக்கான பயிற்சியாளர் பிரண்டன் மக்கலத்தால் மொயின் அணுகப்பட்டிருந்தபோதும், அதைப் பின்னர் மறுத்திருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 07 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.